# வரலாற்றில் முதல் பெண்புலி

இருங்கோ" என்றார். கெஞ்சிக் கேட்டதால் எனக்குச் சயனைட்டில் கறுப்பு நூல் கட்ட அனுமதி கிடைத்தது. நான் சயனைட் கழுத்தில் நூலைப் போட்டு இறுக்கிக் கொண்டிருந்தபோது, இவள், "இறுக்கா விட்டால் கழண்டுவிடும். நல்லா இருக்கு" என்றாள். நான் இறுக்கியபோது, "இன்னும் இறுக்கி இழு மணி. இறுக்கி இழு மணி." என எனக்கு உற்சாகமூட்டியதால், நான் பலமாக இழுத்தபோது, சயனைட் கழுத்தோடு உடைந்துவிட்டது. எனக்குத் தூள் பறந்ததால் சாதுவான மயக்கம் ஏற்பட்டது. அவள் உடைந்ததை எடுத்து மணந்தபோது, அவளும் சாதுவான மயக்கமுற்றாள். பொறுப்பாளர் ஏசினார். "அநியாயப்படுவார் செய்கிற வேலைகள் ஒன்றா, இரண்டா.......?"

## கோட்டையிலும் தொலைத்தொடர்பு நிலையத்திலும்

1987இல் மன்னாரைவிட்டு யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் சுற்றிக் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இக் காலப்பகுதியில் பீச் றோட் பக்கமாகக் காவற்கடமையில் நின்றோம். ஒருநாள் நாங்கள் வேறுபகுதியில் கண்ணிகள் வைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். மாலதி மட்டுமே காவல் கடமையில் நின்றாள். அப்போது எதிர்பாராதவிதமாகக் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் முன்னேறி மாலதியின் காவல் நிலைக்கு முன்னால் வந்துவிட்டனர். மாலதி சிறிது நேரம் தனித்து நின்றே இராணுவத் தினருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து தள்ளினாள். சிறிது நேரத்தில் மேஜர் சோதியாக்காவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். மூன்று, நான்கு பேர் மட்டுமே சண்டை செய்வதைக் கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில், மேஜர் சோதியாக்காவின் குப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்ததால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக் கொண்டு நின்றாள். மேஜர் சோதியாக்காவைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்றதும், மாலதி ஓடிச்சென்று நாம் ஏற்கெனவே புதைத்து வைத்திருந்த 'பன்றிக்குட்டி' எனும் மைன்ஸை வெடிக்கச் செய்துவிட்டாள்.

பெரியதொரு வெடிஓசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர் பயத்தின் பீதியால் பின்வாங்கி கோட்டைக்குச் சென்றுவிட்டனர். பின்னர், "மாலதி ஏன் பன்றிக்குட்டியை அமத்தினாய்" எனக் கேட்கப்பட்டபோது, "ஆமியை எதிர்த்துத் தாக்குதவற்கு எமது ஆட்கள் நிறையப் பேர் இல்லை என்பதை அவன் தெரிந்துவிட்டான். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடையாட்கள் வருவதற்கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறிவிடுவான் என்றதினால் அவனை பின்வாங்கச் செய்யவே எங்கோயோ கிடந்த மைன்ஸை அமத்திவிட்டேன்" என்றாள்.

மாலதி திடீரென இப்படி ஓர் மாற்று நடவடிக்கையைச் செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம். மாலதி எவ்வளவுதான் விளையாட்டுத்தனம் செய்தாலும் அவளுக்குள் வீரமும் அஞ்சாமையும் நிறைந்து காணப்பட்டது. கோட்டையில் இருந்து ஷெல்லடி அடி தொடங்கியதும் வெளிக்கிடப் போறான் என்ற ஊகம் எங்களுக்கு இருக்கும். உடனே நாங்கள் இராணுவத்தை எதிர்ப்பதற்கு, எங்களுக்கென ஒதுக்கப்பட்ட காவல் நிலைகளுக்கு விரைந்து செல்வோம்.

இந்த விரைவு வேளைகளில் மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்றுவிடுவாள். நாமெல்லாம் செல்லடிக்கு நிலை எடுத்து, நிலை எடுத்துச் செல்வோம். மாலதியோ அப்பிடியில்லை. முகாமில் இருந்து ஓடத்தொடங்கினால் தனது காவல்நிலையை அடைந்ததும்தான் திரும்பிப் பார்ப்பாள். சிலர் கூறுவார்கள் 'முரட்டு மாலதி என்று ......

மாலதி எந்நேரமும் சேட் கையை உயர்த்தி மடித்துவிட்டு, ஜீன்ஸ் காலை மடித்துக் கொண்டே நிற்பாள். நாங்கள் 'ரகுமான் எடுவை' என்று பகிடி பண்ணினால், அவள், "இல்லை. நான் புருஸ் லீ எடுவைதான் எடுக்கிறன். எப்போதும் கையாலும், காலாலும் சண்டை பிடிக்கத் தயாராக இருக்கின்றேன். என்னைக் கண்டால் ஆமி ஓடுவான்" என்று கூறுவாள்.

1987இன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத் தாக்குதலில் மாலதி பங்கு கொண்டாள். சண்டை என்றால் மாலதி துடிப்புடன் நிற்பாள். உலங்கு வானூர்தி வருவதையோ, குண்டுவீச்சு விமானம் வருவதையோ, ஷெல் வருவதையோ பார்க்கவும் மாட்டாள். முன்னுக்குச் சென்று, ஆமியை சுடுவதிலேயே குறியாக நிற்பாள். இதே மாதிரித்தான், தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதலிலும் ஈடுபட்டாள். ஒரு பெண் போராளி இந் நடவடிக்கையில் காயப்பட்டாள். காயப்பட்டவளைத் தூக்கிச் செல்லும்படி மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப்பட்டபோது (இந்நேரம் சண்டை முடிந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுக் கொண்டிருந்தன) மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினாள்.

"வேறு யாருமில்லை. சண்டை முடிந்தது தானே. நீங்கள் கொண்டு போங்கோ" என்றபோது, அவ்விடத்தை விட்டுப்போக விருப்பமின்றி, காயப்பட்ட போராளியைத் தூக்கிச் சென்று, மதிலுக்கு அங்கால் வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு, "இவரைக் கொண்டு போகட்டாம் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போராளியை அவசரமாக ஒப்படைத்துவிட்டு மீண்டும் தான் நின்ற இடத்துக்கு விரைந்து ஓடிவந்துவிட்டாள்.

இந்தச் சண்டையின்போது, மாலதியின் உடலின் சில பகுதிகளில் (கை, கால் உட்பட) சிறு, சிறு ஷெல் துண்டுகள் இருந்தன. "மருத்துவமனைக்குச் சென்று பீஸ்களை எடுத்துவிட்டு வா" என்றபோது, "போகமாட்டேன்" என்று மறுத்துவிட்டு, புது 'பிளேற்' ஒன்று எடுத்து, தானே தன் உடம்பில் இருந்து ஷெல் துண்டுகளை வெட்டி எடுத்தாள். தன்னைத்தானே கீறும் அளவுக்கு அபாயகரமான துணிவு கொண்டவள்தான் அவள்.

## மாலதியின் குறும்புகள்

மாலதி, சண்டை செய்வது என்றால் மிகவும் சந்தோசத்தில் துள்ளிக்கொண்டு நிற்பாள். சண்டைக்கான அறிகுறிகள் எதுவும் தென்பட்டால், உடனேயே மகிழ்ச்சியோடு, "ஆமிக்குச் சொல்லியடிப் பேனடி, அடிச்சன் என்றால் நெற்றி அடிதானடி" என்று பாடிக்கொண்டே நிற்பாள்.

1987இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப்பாய்க்கு வந்தோம். கோப்பாயில் இருந்து ஒவ்வொரு இரவும் நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றிலும் காவற்கடமை நிலைகள் இருந்தன. இதில் நாம் கோப்பாய்ப் பாலத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாகப் பிரிந்து படுப்போம். எங்களுக்குக் கிடைத்த இடம் சுடலை. சுடலைக்குள் படுத்திருப்போம். சத்தங்கள் எதுவும் கேட்டால் காவற்கடமையில் நிற்பவர் இன்னும் இரண்டொருவரை எழுப்பிக் கொண்டு மண்மேட்டால் சென்று, ஆமியின் நடமாட்டத்தை அவதானித்து வருவோம்.

மாலதி காவற்கடமையில் நிற்கும்போது, ஏதாவது சத்தம் கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து வருவாள். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். நாவற்குழி இராணுவ முகாமில் அடிக்கடி விளக்குகளை அணைப்பான் ஆமி. அவ்வேளையில் நாங்கள உசார் நிலைக்கு வருவோம்.



காவற்கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லாரையும் எழுப்புவாள். திடுக்கிட்டு நித்திரையால் எழும்பி "என்னடி" என்றால், "பேயடி, பேயடி" என்று பயமுறுத்துவாள். "உண்மையாய் நான் கறுப்பாய் – வெள்ளையாய் ஆவியைக் கண்டனான்" என்று கூறுவாள். "நேற்று எரிச்ச பெடியன்ற ஆவியடி. இண்டைக்குத்தான் வெளியே போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப் பயமுறுத்துவாள்.

ஒருநாள் நான் ஒரு சீமெந்து மேடைமேல் படுத்திருந்தபோது, மாலதி வந்து எழுப்பிச் சொன்னாள், "எடியே கெதியாய் எழும்படி எழும்படி" என்றாள். அவசரமாக எனது ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு, "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்டபோது, "எடியே, நீ படுத்திருந்த இடம் சமாதியடி" என்றாள். எனக்குச் சரியான கோபம். ஏசிவிட்டுப் போய்ப்படுத்துவிட்டேன். மாலதியின் இந்தத் தொல்லைகளால் மாலதிக்குக் காவற்கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண்டைபிடித்து, காவற்கடமை நேரம் போடச் செய்துவிடுவாள்.

காவற்கடமையில் ஈடுபடும் இடத்துக்குச் சென்றதும் "வாடி, நித்திரை கொள்ளும்வரை இடம்பார்ப்போம்." என்பாள். "சும்மா ஓரிடத்தில் இரடி" என்றால், "எடியே எங்கே எங்கே நிலை எடுத்து அடிபடலாம் என்று இடம் பார்த்தால் தானே ஆமி வந்தால் அட்டகாசமாக அடிபடலாம்" என்பாள். பின்னர் இரண்டு பேரும் கோப்பாய் கிறேசர்சரடியில் இருந்து கைதடிப் பாலத் தொங்கல்வரை நடந்து, நடந்து செல்வோம்.

பகலில் எங்களுடைய முகாமில் நிற்போம். பகலில் இரண்டுபேரும் ஒரே சண்டை பிடிப்போம். சற்று நேரத்தில் சமாதானமாகி ஒன்றாக வெளியில் செல்வோம். நான் அடித்துவிட்டு ஓடுவேன். அவள் சந்தி என்றும் பாராமல், கோப்பாய்ச் சந்தியில் துரத்தி வந்து அடித்துவிட்டே திரும்புவாள்.

ஒருநாள் இரண்டுபேரும், துரத்துப்பட்டுக் கொண்டு கோப்பாயில் ஒரு அப்புவின் வாழைத்தோட்டத்துக்குள் சென்றோம். நான் முதலில் சென்று, களைத்துப்போய், "அப்பு தண்ணி தாணை" என வாங்கிக் குடித்துக் கொண்டிருக்க, இவளும் களைத்துப்போய் வந்தாள். "எனக்கும் தண்ணி தா மணி" என்றாள். நானும் தண்ணீரைக் கொடுத்து விட்டு எனக்கு அடிக்காதை என்றேன். அவள் சிரித்து விட்டு வா 'வா பேசுக்குப் போவோம்' என்றாள்.

கோப்பாய் பாலத்தடியில் அடிக்கடி உலங்கு வானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம் கிறேசரடிக்கு விரைந்து செல்வோம். இவ்வேளைகளில் மதில்களைப் பாய்ந்து, பாய்ந்து முதலில் கிறேசரடிக்கு செல்பவள் மாலதிதான். மாலதி மதில் பாய்வதில் கெட்டிக்காரி. "இந்தா பார் போறன்" என்றால் அடுத்த நிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பாள்.

## கொக்கோகோலாவும் பன்ராவும்

எங்களுக்குக் 'கொக்கோகோலா' குடிக்கக் கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மாலதிக்குக் கொக்கோகோலா என்றால் சரியான பிரியம். கொக்கோகோலா குடிக்கக் கூடாது என்று தடைவிதித்த இரண்டாம் நாள் மாலதி, என்னிடம் "வாடி கூல்பாருக்கு போய்வரவோம்" என்றாள். எனக்குத் தெரியும், இவள் கூல்பார் சென்றால் கொக்கோகோலா தான் குடிப்பாள் என்று. நான் வரவில்லை என்றேன். "இண்டைக்கு மட்டும் வா" என்றாள். "சரி வா. கொக்கோகோலா குடிக்கக்கூடாது. வேறு ஏதாவது குடிப்போம்" என்றேன். அந்நேரம் வெளியில் செல்வதென்றால் சாதாரண மானவர் களாகத்தான் உடையணிந்து செல்வோம். கடைக்குள் சென்ற மாலதி இரண்டு பன்ராவுக்கும் இரண்டு கொக்கோ கோலாவுக்கும் சொன்னாள். "ஏன் மாலதி?" என்றேன். சிரித்துக் கொண்டே "பன்டாவை மேசையில் வைத்துவிட்டு, கொக்கோ கோலாவைக் குடிப்போம்" என்றாள். "என்ன மாலதி விசர்க்கதை கதைக்கிறாய். எங்களையல்லோ கொக்கோகோலா குடிக்க வேண்டாம் என்றார்கள். குடித்துக் கொண்டு இருக்கையில் யாராவது எமது ஆட்கள் வந்தால் என்ன செய்யிறது" என்றேன். "இண்டைக்கு மட்டும் குடிப்பம். எனிமேல் குடிக்க வேண்டாமடி" என்றாள். சரியென மேசையில் அமர்ந்தோம். "முதலில் பன்டாவை எடுத்து, அரைவாசியைக் குடித்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு, பின் கோலாவைக் குடி" என்றாள். இடையில் எதிர்பாராதவிதமாக எமது உறுப்பினர் ஒருவர் வந்தார். நாங்கள் இருவரும் கொக்கோகோலாவைத் தள்ளிவைத்துவிட்டு, பன்டாவை குடித்துக் கொண்டிருந்தோம். அவர் சென்றபின் மீண்டும் கொக்கோகோலாவைக் குடித்துவிட்டு வெளியில் வந்ததும் மாலதி சொன்னாள். "எப்படி மணி என்னுடைய 'ஐடியா'?" என்று. பின் இரவு பொறுப்பாளரிடம் நடந்ததை மாலதி கூறி,

தொடர்ச்சி 10ம் பக்கம்....